5th November 1966]

(இ) ஆம் எனில், அதன் மீது எடுக்கப்பட்ட நடவடிக்கை என்ன ?

கனம் திரு. ந. நல்லசேனுபதி சர்க்கரை மன்ருடியார் : (அ) ஆம்.

(இ) அரக்கோணம் தாலூகா கூட்டுறவு விற்பனைச் சங்கம் 1963-64-ம் ஆண்டில் செயல்பட்டது குறித்து வேலூரிலுள்ள மாவட்டக் கூட்டுறவுத் தணிக்கை அதிகாரியிடமிருந்து பெறப் பட்ட தனி அறிக்கையின் மூலம் அச்சங்கத்தின் முன்னுள் செய லாளர் ஒருவர் பணம் கையாடல் செய்தார் என்றும் சங்கக் கணக்குகளில் பல குற்றங்குறைகள் இருந்தனவென்றும், மகசூல் கடன்களை வழங்குவதில் ஒழுங்கீனங்கள் இருந்தனவென்றும் தெரிந்தது. உடனடியாக அச் சங்கத்தின் கணக்குகள் பரிசிலனை செய்யப்பட்டு குற்றங்குறைகள் சரிப்படுத்தப்பட்டன. சங்கத்தின் முன்னுள் செயலாளர் கையாடிய ஐயாயிரத்து நூற்று எண்பத் திரண்டு ரூபாய் தொண்ணூற்றிரண்டு காசுகள் அவரிடமிருந்து வசூலிக்கப்பட்டு, அவர் வேலூர், கூட்டுறவு மத்திய பாங்கியின் பணியிலிருந்து நீக்கப்பட்டார். உரிய காலத்தில் கட்டப்படாத கடன்களை வசூலிக்கச் சங்கம் சட்ட நடவடிக்கை எடுத்துள்ளது. 1964-65-ம் ஆண்டிற்குப் பெறப்பட்ட தனி அறிக்கையைப் பொறுத்தவரையில், அதில் கண்டுள்ள ஒழுங்கீனங்கள் குறித்து ஆய்வு நடத்துமாறு ராணிப்பேட்டை கூட்டுறவுச் சங்கத் துணைப் பதிவாளர் கேட்கப்பட்டுள்ளார்.

திரு. எஸ். ஜே. ராமசாமி : இந்தக் கூட்டுறவு மார்க்கெட்டிங் சொசைட்டியின் முன்னுள் தலைவர் பணத்தைக் கையாடல் செய்த தாக ஒப்புக் கொண்டார். அவருக்கு கையாடல் செய்த குற்றத்திற்காக என்ன தண்டனை கொடுக்கப்பட்டது ?

கனம் திரு. ந. நல்லசேனுபதி சர்க்கரை மன்ருடியார் : சர்வீசில் இருந்து ரிமூவ் செய்திருக்கிறோம். இதர நடவடிக்கை களும் எடுக்கப்பட்டு வருகின்றன.

கனம் சபாநாயகர் : அவர் மீது பிராசிக்யூஷன் போடவில்லையா என்று கேட்கிறார்.

கனம் திரு. ந. நல்லசேனுபதி சர்க்கரை மன்ருடியார் : முதலில் டிபார்ட்மெண்டிலேயே விசாரணை நடத்துகிறார்கள். அவர்களுக் குப் போதுமான துப்பு துலங்கவில்லை என்றால் போலீசிடம் ஒப்படைக்கிறார்கள். ஆனால் இந்தச் சங்கத்தைப் பொறுத்த வரையில் போலீசில் கொடுக்கவில்லை. டிபார்ட்மென்டே நடத்தும் விசாரணை முடியும் தருவாயில் இருக்கிறது.

*** 458 கேள்வி.—திரு. பி. முருகையன் :** கனம் கூட்டுறவு அமைச்சர் தயவுசெய்து கிழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப் பாரா—

(அ) இராமநாதபுரம் மாவட்டம், திருப்பத்தூர் தாலூகா, செட்டிக்குறிச்சி, எரியூர் ஆகிய ஊர்களில் உள்ள கூட்டுறவு நாணய சங்கங்களில் கையாடல் செய்யப்பட்டதாக அண்மையில் விசாரணை கள் ஏதேனும் நடைபெற்றதா ?

(இ) ஆம் எனில், அதன் முடிவுகள் யாவை?

கனம் திரு. ந. நல்லசேனுபதி சர்க்கரை மன்ருடியார் : (அ) ஆம்.

(இ) செட்டிக்குறிச்சி பல நோக்குக் கூட்டுறவுச் சங்கத்தின் நடவடிக்கைகளைக் கூட்டுறவுத் துறை விசாரணை செய்ததில் கையாடல் நடந்திருப்பது தெரியவந்தது. இது குறித்துப் போலீஸ் புலன் விசாரணை நடந்து வருகின்றது.

எரியூர் கூட்டுறவு நாணயச் சங்கத்தில் கையாடல் செய்தவர்கள் மீது வழக்குத்தொடுத்து, கையாடப்பட்ட தொகையை அவர்களிடமிருந்து வசூலிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றது.

திரு. பி. முருகையன் : தலைவர் அவர்களே, கூட்டுறவுச் சங்க உதவிப் பதிவாளர் அறிக்கையை போலீசில் கொடுத்தும், நடவடிக்கை எடுக்கக் கேட்டும், அதில் இதுவரை நடவடிக்கை எடுக்காததற்குக் காரணம் என்ன என்று அறிய விரும்புகிறேன்.

கனம் திரு. ந. நல்லசேனுபதி சர்க்கரை மன்ருடியார் : இதுபோன்ற நடவடிக்கை எடுப்பதற்குத் தாமதம் ஏன் ஏற்படுகிறது, இதைத் தவிர்ப்பது எப்படி என்பதைப் பற்றித்தான் அதிகாரிகளை வைத்துக்கொண்டு, ஐ.ஜி. யையும் அழைத்துப் பேச இருக்கிறேன். இரண்டு நாளில் இதுபற்றிப் பேச்சு நடைபெறும்.

திரு. இராம. அரங்கண்ணல் : மேற்படி சொசைட்டியின் தலைவர் ஏற்கனவே ஒரு மோசடி வழக்கில் ஓர் ஆண்டுக் காலம் தண்டனை பெற்றவர். அவர் மீது இப்போது வழக்குத் தொடர போலீஸ் வசம் 6 மாதங்களுக்கு முன்பே கேஸ் கொடுக்கப்பட்டும் இதுவரை போலீசார் நடவடிக்கை எடுக்கவில்லை என்ருல் யாருடைய இன்ஃப்ளுவன்ஸ் காரணமாக நடவடிக்கை எடுக்கப்படவில்லை?

கனம் திரு. ந. நல்லசேனுபதி சர்க்கரை மன்ருடியார் : இதில் யாருடைய இன்ஃப்ளுவன்சும் இல்லை. இதுபோன்ற தாமதத்தைத் தவிர்க்கத்தான் அதிகாரிகளைக் கூப்பிட்டு வைத்துக் கொண்டு பேச இருக்கிறேன்.

திரு. எஸ். முருகையன் : குற்றச்சாட்டைக் கண்டு பிடித்த அதிகாரி அங்கிருந்து உடனேயே மாற்றப்பட்டிருக்கிருர் அல்லவா?

கனம் திரு. ந. நல்லசேனுபதி சர்க்கரை மன்ருடியார் : மூலக் கேள்வியில் இரண்டு ஊர்கள் இருக்கின்றன. எந்த ஊரைப் பற்றி கனம் அங்கத்தினர் கேட்கிருர்?

திரு. எஸ். முருகையன் : நான் எரியூரைப் பற்றிக் கேட்கிறேன்.

கனம் திரு. ந. நல்லசேனுபதி சர்க்கரை மன்ருடியார் : அந்தத் தகவல் இப்போது என்னிடத்தில் இல்லை.